# 17

# தமிழ்ச் சொற்றொடர் அமைப்பு வரலாறு

சொற்கள் தொடர்ந்து அமையும் அமைப்பைச் சொற்றொடர் என்பர். சொல்லியலில் சொற்களைப் பகுக்க, சொற்கள் தொடராக நிற்றலைச் சொற்றொடரில் காண்கிறோம். சொற்கள் காலப் போக்கில் மாற, சொற் பொருளும் மாறுவதைக் காண்கிறோம். ஆனால், சொற்றொடர் அமைப்பில் பெரும் மாறுபாட்டைக் காண முடியாது. சொற்றொடரமைப்பே ஒரு மொழியின் தனிச்சிறப்பைக் காட்டவல்லதாகும். ஒரு வாக்கியத்தில் அமைகின்ற பல்வேறு சொற்களிடையே காணப்படுகின்ற இலக்கணத்தொடர்புகளையும் பொருள் தொடர்புகளையும் நன்கு அறிகிறோம். தொடரியல் ஆராய்ச்சியின் வரலாற்றை நோக்கின் மூன்று நிலைகளை நாம் காணலாம்.

(i) தொல்காப்பியர், நன்னூலார் போன்ற மரபு இலக்கண ஆசிரியர்கள் (Traditional grammarians) சொற்றொடர் அமைப்பை ஆராய்ந்த நிலையை முதல் நிலையாகக் கொள்ளலாம்.

(ii) அமைப்பு மொழியியல் (Structural Linguistics) வளர்ந்த நிலையில், தொடரியலைப்பற்றி ஆராயவேண்டுமென எண்ணம் ஏற்பட்டது. அதனால் சில கொள்கைகளும் கோட்பாடுகளும் வழிமுறைகளும் உருவாயின. இந்நிலையில்தான் அண்மை உறுப்பு பிரிப்புமுறை (Immediate Constituent Analysis) தோன்றியது. இதனை இரண்டாவது நிலையாகக் கருதலாம்.

(iii) *1950* ஆம் ஆண்டையொட்டிய காலப் பகுதியில் மாற்றிலக்கணம் (Transformation grammar) என்ற கொள்கை உருவாயிற்று. தொடரியல் பற்றி ஆராய்ந்த கொள்கைகளுள் மாற்றிலக்கணக் கொள்கையே மிகச் சிறந்ததாக இன்று கருதப்படுகின்றது. தொடரியலைப் புதியதொரு நிலையில் ஆராய்ந்த இந்நியையை மூன்றாவது நிலையாகக் கருதலாம்.

மரபு இலக்கணங்களும் தொடரியலும்:

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை ஆராய்ந்து நோக்கின், தொடரியல் கருத்துக்களும் நுட்பங்களும் உள்ளமை தெரிய வரும். கிளவியாக்கம், வேற்றுமையியல்,வேற்றுமை மயங்கியல் போன்ற

இயல்களில் காணப்படும் பல நூற்பாக்கள் இவ்வுண்மையைச் சுட்டிக் காட்டுவனவாக உள்ளன. கிளவியாக்கத்திலுள்ள அறுபத்தொரு நூற்பாக்களில் ஐம்பதிற்கும் மேற்பட்டவை தொடரியல் விளக்கத்தையே அளிக்கின்றன. கிளவியாக்கம் என்ற தொடரே பல கிளவிகளால் அதாவது பல சொற்களால் ஆக்கப்படும் தொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பற்றிப் பேசுவது எனப் பொருள்படும். இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட ஒன்பது ஓத்தினுள்ளும் முதற் கண்ணது கிளவியாக்கம். இது கிளவியாக்கமென விரியும். அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சியென்றவாறு. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் மேலாகு நிலைமையைக் கிளவியாக்கம்'1 என்றார் தெய்வச்சிலையார். சுப்பிரமணிய சாஸ்திரியார்2 அவர்களும் இவ்வியல் தொடர் ஒற்றுமை இயைபு, (Concord) பற்றிக் கூறுவதாகக் குறிப்பிடுகின்றார். இவ்வியலின்கண் எழுவாய் பயனிலை *(494)* பெயரடை-பெயர்*(506, 509)* போன்றவற்றில் காணப்படும் இயைபு *(504, 511, 521)* வாக்கியங்களில் காணப்படும் பல்வேறு சொற்களின் முறைவைப்பு,இரு வாக்கியங்கள் இணையும் போது ஏற்படும் மாற்றங்கள் போன்றவை காணப்படுகின்றன. வேற்றுமை இயலில் வேற்றுமையை எட்டாகப் பிரித்து அவற்றின் உருபுகளைக் கூறிச் செல்லும் ஆசிரியர் , அவ்வேற்றுமைகள் எத்தகைய வினைச் சொற்களை ஏற்று நிற்கும் என்பதையும் கூறுவது தொடரியல் விளக்கத்தைக் காட்டுவதாக உள்ளது. முதல் வேற்றுமையினை எழுவாய் வேற்றுமையென்றும் அவ்வெழுவாயாகப் பெயர்ச் சொல்லே அமையும் என்றும் கூறிச் செல்கின்றார். நன்னூலார் அப்பெயர்ச் சொல்லைத் 'திரிபில் பெயர்' என்கிறார். இவ்வாறு பெயர்ச் சொல் எழுவாயாக அமைய, அதன் பயனிலையாக வினைச்சொல்லோ, பெயர்ச் சொல்லோ வினாச்சொல்லோ வந்தமையும் என எல்லா மரபு இலக்கணங்களும் கூறுகின்றன. தமிழ் வாக்கியத்திற்கு எழுவாய்-பயனிலை அடிப்படை என்பது இதனால் பெறப்படுகின்றது. எந்தெந்த வினைகள் எந்தெந்த வேற்றுமைகளுடன் வருகின்றன என்பதை வேற்றுமையியலிலும் சில வினைகள் சில வேற்றுமை உருபுகளோடு வரும்போது தத்தம் பொருளை இழந்து நிற்கின்றன என்பதை வேற்றுமை மயங்கியலிலும் காணலாம்.

> 'கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு
> உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை'. *(268)*

என்ற நூற்பாவில் இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் 'சார்ந்தான்' என்ற வினையோடு வரும்போது மயங்குகின்ற நிலையைக் காட்டுகின்றது.

பெயர் எச்சத்தைப் பெயரெஞ்சு கிளவி'என்று குறிப்பிடுவதே தொடரியல் அடிப்படையாகும். செய்யும், செய்த என்ற இரு வாய்பாடுகளில் காணப்படும் இவ்வெச்சம் உயர்திணைப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களையும் (700) கொண்டு முடியும் என்று இப்பெயர்களுக்கும் அப்பெயரெச்சத்திற்குமிடையே காணப்படும் இலக்கணத் தொடர்பு பலவேறாக இருக்குமென்றும் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

'நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே.' (719)

என்ற நூற்பாவில் இடம், செயப்படுபொருள், காலம், கருவி, எழுவாய், வினை என்ற ஆறு வகையான இலக்கணத்தொடர்புகள் பெயரெச்சத்திற்கும் பெயருக்குமிடையே காணப்படும் எனக் கூறிச் சென்றுள்ளார்.

ஒரு தொடர் பல பொருள்களைத் தந்து நிற்றலை மொழிகள் பலவற்றில் காணலாம். ஒன்று பல பொருள் தரும் ஒரு சொல்லில் உண்டாகும் சொல் மயக்கம் (Lexical ambiguity), சொற்களின் அமைப்பில் உண்டாகும் அமைப்பு மயக்கம் (Structural ambiguity) என இரண்டு வகையுண்டு. 'மா' என்ற சொல் மாமரத்தையும் விலங்கினையும் குறிக்கும்.

'மா கண்டேன்'

என்பது 'மாமரத்தினைக் கண்டேன்', 'விலங்கினைக் கண்டேன்' என இரு பொருள்படும்.

'கொன்ற புலி'

போன்ற தொடர்கள் புலி கொன்றதா அல்லது யாராவது புலியைக் கொன்றார்களா என்ற இரு பொருளைத் தந்துநிற்கக் காண்கிறோம். இத்தகைய மயக்கம் பற்றி

'தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்
கடிநிலை யிலவே பொருள்வயி னான.'

என்ற நூற்பாவில் கூறப்பட்டுள்ளது.

எழுவாயாக அமையும் பெயர்ச் சொல்லுக்கும் பயனிலையாக அமையும் வினைச் சொல்லுக்குமிடையே நம் மொழியில் ஓர் இயைபைக் காண்கிறோம்.

'வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே' - (தொ. சொ. 11)

என்ற நூற்பாமூலம் பயனிலை காட்டும் திணை பால்களை, எழுவாயும் காட்டும் என்பது அறியலாம். இன்றும் சொற்றொடரில் இஃது அடிப்படையாக உள்ளதைக் காண்கிறோம். ஆனால், காலப் போக்கில் இவ்வமைப்பில் மாற்றம் ஏற்பட்டதையும் ஆறுமுக நாவலர் இலக்கணச் சுருக்கத்தில் குறிப்பிடுகின்றார். 'ஆறனு பொழிந்த வேற்றுமையுருபுகளையும் வினைமுற்றையும் வினையெச் சத்தையும் முடிக்க வருஞ் சொற்கள், அவைகளுக்குப் பின்னன்றி முன் வருதலுமுண்டு'1

அடை சினை முதல் என அமையும் தொடர் பிரிக்க முடியாதவாறு அமைந்துள்ளதைத் தொல்காப்பியரே குறிப்பிட்டுள்ளார்.

'அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.'(509)

இதேபோன்று தொகைநிலைத் தொடர், வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை போன்றவை எழுவாயாக அமையுமிடத்து அவற்றைப் பிரித்தெழுத முடியாது. சிறப்புப் பெயரும் இயற்பெயரும் அடுக்கி வரும் தொடரையும் பிரித்தெழுத முடியாது.

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச் சொற்கள் சொற்றொடரில் இடம் பெறும்போது 'உம்' எனும் இடைச்சொல் சேர்த்துக் கூறப்படுவதுண்டு. தொல்காப்பியர் 'உம்' எனும் இடைச்சொல் பற்றிக் கூறுமிடத்து,

'எச்சம் சிறப்பே யைய மெதிர்மறை
முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்
றப்பா லெட்டே யும்மைச் சொல்லே' (தொ. சொ. 225)

எனக் குறிப்பிடுவார். அவற்றுள் எண்ணும்மை பற்றி 'நிலனும் நீரும் தீயும் வளியுமாகா யமுமெனப் பூதமைந்து என்புழி எண்ணுதற்கண் வருதலின் எண்ணும்மை' எனச் சேனாவரையர் கூறுகிறார். இன்றும் அவ்வாறே வழங்குவது இங்குக் குறிப்பிடத்தக்கது.[2]

தமிழில் காணப்படும் பல்வேறு சொற்றொடரமைப்பை எடுத்துக் காட்டுடன் காண்போம்.

'வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே' (தொ. சொ. 11)

என்ற நூற்பாமூலம் பயனிலை காட்டும் திணை பால்களை, எழுவாயும் காட்டும் என்பது அறியலாம். இன்றும் சொற்றொடரில் இஃது அடிப்படையாக உள்ளதைக் காண்கிறோம். ஆனால், காலப் போக்கில் இவ்வமைப்பில் மாற்றம் ஏற்பட்டதையும் ஆறுமுக நாவலர் இலக்கணச் சுருக்கத்தில் குறிப்பிடுகின்றார். 'ஆறனுருபொழிந்த வேற்றுமையுருபுகளையும் வினைமுற்றையும் வினையெச்சத்தையும் முடிக்க வருஞ் சொற்கள், அவைகளுக்குப் பின்னன்றி முன் வருதலுமுண்டு'1

அடை சினை முதல் என அமையும் தொடர் பிரிக்க முடியாதவாறு அமைந்துள்ளதைத் தொல்காப்பியரே குறிப்பிட்டுள்ளார்.

'அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.'(509)

இதேபோன்று தொகைநிலைத் தொடர், வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை போன்றவை எழுவாயாக அமையுமிடத்து அவற்றைப் பிரித்தெழுத முடியாது. சிறப்புப் பெயரும் இயற்பெயரும் அடுக்கி வரும் தொடரையும் பிரித்தெழுத முடியாது.

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச் சொற்கள் சொற்றொடரில் இடம் பெறும்போது 'உம்' எனும் இடைச்சொல் சேர்த்துக் கூறப்படுவதுண்டு. தொல்காப்பியர் 'உம்' எனும் இடைச்சொல் பற்றிக் கூறுமிடத்து,

'எச்சம் சிறப்பே யைய மெதிர்மறை
முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்
றப்பா லெட்டே யும்மைச் சொல்லே' (தொ. சொ. 225)

எனக் குறிப்பிடுவார். அவற்றுள் எண்ணும்மை பற்றி 'நிலனும் நீரும் தீயும் வளியுமாகா யமுமெனப் பூதமைந்து என்புழி எண்ணுதற்கண் வருதலின் எண்ணும்மை' எனச் சேனாவரையர் கூறுகிறார். இன்றும் அவ்வாறே வழங்குவது இங்குக் குறிப்பிடத்தக்கது.[2]

தமிழில் காணப்படும் பல்வேறு சொற்றொடரமைப்பை எடுத்துக் காட்டுடன் காண்போம்.

1. எழுவாயும் பயனிலையும் திணை, பால், இடம் என்பவற்றால் ஒத்திருத்தல் தமிழ் மொழியின் இயல்பாகும்.

அவன் வந்தான்.
அவள் வந்தாள்.
அது வந்தது.

2. பயனிலை பொதுவாகச் சொற்றொடரின் இறுதியில் வருவதே இயல்பானாலும், மாறி வருதலும் உண்டு.

கண்டனென் கற்பினுக்கணியைக் கண்களால்.
(கம்ப. திருவடி 57)

நோகோ யானே.
வந்தார் தலைவர்
கண்டேன் அவனை.

3. செயப்படுபொருள் பெரும்பாலும் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் வரும். சிறு பான்மை மாறி வருதலும் உண்டு.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்றினார்.

4. எழுவாய் ஒருமையாயிருக்க, பயனிலை பன்மையாய் வரும்.

‘அறஞ் செய்தீமோ அருள் வெய்யோய்’ -(புற. 145)

5. பல வினைகள் வரின், ஒருமை பன்மை மயக்கம் நிகழும்.

‘உண்கு மெந்தை நிற் காண்கு வந்திசின்’- (புற.125)

6. பயனிலை பெரும்பாலும் வினை முற்றாக அமைய, சிறு பான்மை பெயராகவும் அமையும்.

‘அவன் இராமன்.’

7. ஓர் உருவம் ஆணா, பெண்ணா எனத் தெளிவாய் அறியப் படாவிடின், எழுவாய் ஒருமையாக யிருப்பினும் பயனிலை பன்மையாகயிருக்கும்.

‘ஆண்மகன் கொல்லோ பெண்டாட்டி கொல்லோ
அஃதோ தோன்றுவார்.
‘அங்கேநிற்பவர் இராமனா அன்றி சீதையா?’

8. எழுவாய், முன்னிலை படர்க்கையாக யிருப்பின் முன்னிலைப் பன்மை வினைப் பயனிலையாக வரும்.

‘நீயும் அவனும் போனீர் (கள்).’

9. எழுவாய் உணர்திணையும் அஃறிணையும் கலந்ததாக யிருப் பின் உயர்திணைப் பன்மையாய் வரும்.

‘நானும் நாயும் சோறு சாப்பிட்டோம்.’

10. எழுவாய் தன்மை முன்னிலைப் பெயர்களாயேனும் தன்மைப் படர்க்கைப் பெயர்களாயேனும் தன்மை முன்னிலைப் படர்க் கைப் பெயர்களாயேனும் இருப்பின், பயனிலை தன்மைப் பன்மையாயிருக்கும்.

‘நானும் நீயும் போனோம்.’
‘நானும் அவனும் போனோம்’
‘நானும் நீயும் அவனும் போனோம்’

11. அன்பினால் அஃறிணைக்கு உயர்திணையும் உயர்திணைக்கு அஃறிணையும் வரும்.

(ஆவின் கன்றைப் பார்த்து) ‘என் தந்தை வந்தான்’ எனக் கூறல்.

(ஆண்மகனைப் பார்த்து)‘என் யானை வந்தது’ எனக் கூறல்

(சிறப்புக்கருதி) ‘செந்தார்ப் பசுங்கிளியார்’ (சீவக. 1036) எனக் கூறல்.

12. சிறப்புப் பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வரல் தமிழ் மரபாகும்.

‘தெய்வப் புலவர் திருவள்ளுவர்.’

13. சுட்டுப்பெயர் இயற்பெயரின் பின்னர் வரும்.

‘சாத்தன் அவன் வந்தான்.’

14. உயர்த்துக் கூறுமிடத்து ஒருமைப் பொருளைக் குறிக்கப் பன்மையும் வரும்.

‘யாமேத்துகம் பலவே.’

15. எழுவாய் ஒருமையாயிருக்க, பயனிலை பன்மையாய் வருவது முண்டு.

‘அறஞ் செய்தீமோ அருள் வெய்யோய்’ -(புற. 145)

16. இரண்டாம் வேற்றுமை யுருபேற்ற பெயர் பெரும்பாலும் வினையின் முன்னர் வரும்.

‘தலையை வணங்கி.’ -(சிலம்பு 490, 33).

17. ஆறாம் வேற்றுமை உருபும் ஐந்தாம் வேற்றுமை உருபும் பெயர் கொண்டு முடிவன. நான்காம் வேற்றுமை சில இடங்

களில் பெயர் கொண்டு முடிதலும் உண்டு. மற்ற வேற்றுமை உருபுகள் வினை கொண்டு முடிவன.

‘எனது முகம்’.
‘மதுரை நகரின் மேற்கு பல்கலைநகர்.’
‘அவனுக்குப் பகை’.
‘நான் அவருக்கு மகள்’.

18. பெயரடை எல்லாம் பெயர்க்கு முன்னும் வினையடை எல்லாம் வினைக்கு முன்னும் அமைகின்றன.

‘நல்ல பையன்’ - பெயரடை
‘வேகமாக வந்தான்.’ - வினையடை

19. பெயரெச்சங்கள் யாவும் பெயர்க்கு முன்னும் வினையெச்சங் கள் யாவும் வினைக்கு முன்னும் வரும்.

‘படித்த பையன்.’
‘படிக்காத பையன்.’
‘அழுது துடித்தான்.’
‘பாடி முடித்தான்.’

20. விரைவின் நிமித்தம் காலம் மயங்குதலும் உண்டு.

‘இதோ வந்தேன்.’

21. எதிர்காலத்திற்குப் பதிலாக நிகழ்காலமும் இறந்த காலமும் வருவதுண்டு.

‘பரதனே துங்க மாமுடி சூடுகின்றான்.’
(கம்ப. அயோ. 216.4)

‘மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்’ (குறள்)

22. ஆங்கிலத்தில் சொற்களை இணைத்தற்கு ‘and’ என்ற இணைப்பு இடைச்சொல் வரும். அச்சொல் பல பெயர்கள் தொடர்ந்து வரும்போது ஈற்றில் மட்டும் வரும். ஆனால், தமிழில் ‘and’க்கு இணையாக ‘உம்’ எனும் சொல் பல சொற்களோடும் வரும்.

‘சேரனும் சோழனும் பாண்டியனும் தமிழகத்தை ஆண்டனர்’.

23. செப்பாக வரும் வாக்கியங்களுக்கும் வினாவாக வரும் வாக்கியங்களுக்கும் வேறுபாடு இல்லை எனலாம். செப்பு வாக்கியங்களின் ஈற்றில் ஆ, ஓ முதலான வினாச்சொற்கள் சேர்க்கப் படும்.

‘[illegible] வந்தாள்’ -செப்பு
‘[illegible] வந்தாளா?’-வினா

24. ஆங்கிலத்தில் இணைப்பு இடப்பெயர் வந்து இரண்டு வாக்கியங்களை இணைக்கும்.

'This is the man who came.'

பெயரெச்சத் தொடரும் வினையாலணையும் பெயரும் அமைதல் தமிழ்த் தொடரியல்பாகும்.

'வந்த மனிதன் போனான்.'
'வந்தவன் போனான்.'

25. 'வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன' என நன்னூலார் இம்மூன்றும் இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவான சொற்கள் என்கிறார். இவை எழுவாயோடு பொருந்தி நிற்றலைக் காணலாம்.

'அவர் வேறு'
'நண்பன் உண்டு.'
'நண்பன் இல்லை.'

26. எண்ணுப்பெயர்களில் ஒன்று முதலான எண்களெல்லாம் பெயருக்குப் பின்னால் வரும்.

'மாடு ஒன்று.'

ஒன்று என்ற எண்ணுப்பெயர் ஒரு என மாறிப் பெயருக்கு முன் வரும்.

ஒரு மாடு.

27. தமிழில் வினையாலணையும் பெயராக வருவதை ஆங்கிலத்தைப் போல பெருந் தொடராக அமைத்துக் கூறும் முறை வளர்ந்துள்ளது.

'வந்தவன் நல்லவன்'
'நன்கு படிப்பவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவார்கள்.'

28. எதிர்மறைகள் செய்திலன், உண்டிலன் எனப் பழங்காலத்தில் வழக்கிலிருந்தன.

'நான் நேற்றுச் செய்யவில்லை'
'அவன் இன்று உண்ணவில்லை'

பிரிநிலை வாக்கியங்களாக அமைந்து தொடர் நிலையில் எதிர்மறைகள் காலம் உணர்த்துகின்றன.

29. தா, வா போன்ற வினைகள் தொல்காப்பியர் காலத்தில் தன்மை, முன்னிலைக்கு வரும் எனக் கூறுகிறார். ஆனால், சங்க காலத்திலே படர்க்கைக்கு வரலாயிற்று.

'பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த'

(படர்க்கை)

ஆங்கிலத்தைப் போன்று தமிழிலும் தனி வாக்கியங்கள் அமையலாம். 'He came, he saw and he conquered'

'அவன் வந்தான், அவன் கண்டான், அவன் வென்றான்'

இதனையே அவன் வந்து, கண்டு வென்றான் எனக் கூறலாம். வினையெச்சங்களைப் பயன்படுத்தித் தொடர் வாக்கியம் அமைக்க முடியும்.

சொற்றொடரமைப்புப் பற்றியவற்றை மொழியியலார் ஒரே வாய்பாடாக அமைத்துக் காட்டுவர்.


{ பெயரடை / பெயரெச்சம் / எண்ணுப்பெயர் } + எழுவாய் { வினையடை / வினை எச்சம் } + பயனிலை

சொல் தனியே நின்று பொருள் உணர்த்த வல்லதாயினும் சொல்லை அடுத்து வரும் அண்மைச் சொல் அப்பொருளைத் தெளிவாக்கப் பெரிதும் உதவுகிறது. அண்மைச் சொல்லோடு இயையும் அமைப்பைத் தொடர் அமைப்பு என்பர். பேராசிரியர் ரா. சீனிவாசன்1 அவர்கள் 'வேற்றுமைப் பொருள் பற்றித் தொடரும் தொடர்களை வேற்றுமைத் தொடர் என்றும் ஏனைய வற்றை அல்வழித் தொடர் என்றும் கூறுவர். தமிழ்மொழியின் தொடரியலில் இவ்விரு பிரிவுகள் அடிப்படையானவை. அதனால் தான் தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் அல்வழித் தொடரையும் அதனை அடுத்து வரும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு ஆகிய இயல்களில் வேற்றுமைத் தொடரையும் ஆராயக் காண்கிறோம்' எனக் கூறுகிறார். 'வந்தேன்' என்று எழுவாய் இன்றிக் கூறினாலும் அதன் எழுவாய்'நான்' என அறிந்து கொள்ளலாம். இவை தோன்றாத போதும் எழுவாயைப்புரிந்து கொள்ளலாம். எனவே 'நான் வந்தேன்' என்னும்பொழுது எழுவாய்க்கும் பயனிலைக்குமிடையே தாண்டு குறிப்பு இருப்பதாகக் கருதுகிறோம்.

### சொற்றொடரமைப்பும் தொடரியல் வழி ஆய்வும்

**அண்மை உறுப்புப் பிரிப்பு முறை (ICA):**

அமைப்பு மொழியியல் (Structural linguistics) வளரத் தொடங்கியபோது, தொடரியலையும் முறையாக ஆராய வேண்டும் என எண்ணினர். சொல் வகைகளைப் பற்றி அமைப்பு அடிப்படையில் விளக்கங் காண முற்பட்டனர். இந்நிலையில்தான் பெயர்த் தொடர்களிலும் வினைத் தொடர்களிலும் காணப்பட்ட




ஒன்று (1) என்பது உறுப்பியாகும். 4,5,6,7 என்பவை உறுப்புக்களாகும். அந்தப் பையன் பால் குடித்தான் என்பதன் அண்மை உறுப்புக்கள் (Immediate Constituents) அந்தப் பையன் என்பதும் பால் குடித் தான் என்பதும் ஆகும். நேரடித் தொடர்புடைய உறுப்புக்களையே ஓர் உறுப்பியின் அண்மை உறுப்புக்களாகக் கொள்வர். ஓர் உறுப்பியை இரு பகுதிகளாக்கி அவற்றில் ஒன்றை நிலையான தாக்கி, மற்றொன்று உள்ள இடத்தில் பதிலியாகத் தனிச்சொல் ஒன்றைக் கூற இயலுமாயின், அப்பகுதியை ஓர் அண்மை உறுப்பாகக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| அந்தப் பையன் | இந்தப் புத்தகத்தைப் படித்தான் |
| ↓ | ↓ |
| (பதிலியாக) | (பதிலியாக) |
| கண்ணன் | உறங்கினான் |
| (ஒரே வடிவத் தொகுதி) | (ஒரே வடிவத் தொகுதி) |


இரண்டு உறுப்புக்கள் பொருள் தரும் முறையில் இணைந்து நிற்கும்போது அதனை அண்மை உறுப்புகள் என்கிறோம். பொருள் தரும் முறையில் சொற்களை இணைத்து விளக்குவது அண்மை யுறுப்புவகை முறையாகும் (Immediate Constituent Analysis).

சொற்றொடரை முதலில் தொடராகப் பிரித்து ஆய்வது முதல் நிலையாகும். பெயர்ச்சொல் தொடர் (பெ. சொ. தொ), வினைச்சொல் தொடர் (வி.சொ.தொ), பெயரடைத்தொடர் (பெ.அ.தொ) வினையடைத் தொடர் (வி.அ. தொடர்) எனப் பலவாறு தொடர்களைப் பிரித்துக் கொள்ள முடியும். இவற்றுள் பெ.சொ. தொடரும் வினைச் சொல் தொடரும் பெரிய தொடர்களாகும். இவ்விரு தொடர்களின் உள்ளுறுப்பாகவே பெ.அ. தொடரும் வி.அ. தொடரும் அடங்கும்.


கண்ணன் வந்தான் என்ற சொற்றொடரை எடுத்துக்கொள்வோம். இதில் கண்ணன் என்பது பெ.சொ.தொ. ஆகும். பெயர்ச் சொல்லைத் தலைமையாகக் கொண்டிருக்கிற தொடரைப் பெ.சொ. தொ. என்கிறோம். இதுபோன்றே வினைச் சொல்லைத் தலைமை யாகக் கொண்டிருக்கிற தொடரை வி. சொ. தொ. என்கிறோம்.

இதன்படிபேர் குறித்தகண்ணன் வந்தான் என்ற சொற் றொடரில் வந்தான் என்பது வினைச்சொல் தொடராகும். இவ் விரண்டு தொடர்களும் ஒன்றையடுத்து ஒன்று நிற்கக் கண்ணன் வந்தான் என்ற சொற்றொடர் கிடைக்கிறது. இச்சிறிய சொற் றொடரைப்பல வகைகளில் பெரியசொற்றொடராக்க முடியும். பெயர்ச் சொல் தொடரில் இருக்கும் பெயர்ச்சொல்லுக்கு அழகான என்ற அடையைச் சேர்க்க அழகான கண்ணன்வந்தான் என்ற சொற்றொடர் கிடைக்கிறது. இங்கு அழகான என்ற அடை வினையைக் குறிக்கவில்லை. பெயரையே தழுவி நிற்கிறது. இவ்வாறு இரு சொற்கள் ஒன்றையடுத்து ஒன்று நிற்கும் முறையை அண்மை உறுப்பு முறை (ICS) என்பர். ஒரு சொற்றொடருக்கும் இன்னொரு சொற்றொடருக்குமுள்ள உறவை வெளிக்கொணரும் சொற் றொடரில் ஏற்படும்பொருட் குழப்பத்தையும் தவிர்க்கப் பயன்படு கின்றது.


அழகான கண்ணன் வந்தான் எனும் தொடரில் கண்ணன் என்னும் அண்மை உறுப்பு வந்தான் என்பதோடு அடுத்து நின்று, கண்ணன் வந்தான் என்ற சொற்றொடரைத் தருகின்றது.





இனி அழகான கண்ணன் வந்தான் என்பதில் அழகான என்பது கண்ணனைத்தான் அடுத்து நிற்கிறதேயொழிய வந்தான் என்னும் அண்மை உறுப்பு அல்ல. அண்மையுறுப்புமுறை கீழ்க்கண்ட படத்தை நமக்குக் கொடுக்கின்றது.




இந்தப் பெயர்ச்சொல் தொடர் வந்தான் என்பதை அடுத்து நின்று ஒரு முழு சொற்றொடராகிறது. எனவே, நமக்குக் கிடைக்கும் வரைபடம் இது.





இனி அழகான கண்ணன் வந்தான் என்பதில் வேகமாக என்பது வந்தான் என்பதை அடுத்து நிற்கும் வினையடைத் தொடராகும். எனவே வேகமாக வந்தான் என்ற முழுமையான தொடர் கிடைக்கின்றது. இது அழகான கண்ணன் என்ற பெயர்ச்சொல் தொடரை அடுத்து நிற்கின்றது.





இவ்வாறாக அண்மையுறுப்பு வகை முறை (I.C. Analysis) மூலம் ஒரு தொடரில் உள்ள உறுப்புகளுக்கிடையில் இருக்கும் அடுத்து நிற்கும் உறவையும் பின்னர் அத்தொடர் முழுமையாக இயங்கி, பிற முழுமையான தொடரோடு கொள்கிற அடுத்து நிற்கும் உறவையும் விளக்குகிறோம். அண்மை உறுப்பு ஆய்வின் மூலம் சிறு தொடரின் உறுப்புக்களிலிருந்து பெருந்தொடரின் உறவுவரை விளக்கப்படுகின்றது. அண்மை உறுப்பின் அமைப்பினைக் கிளைப்படம் (tree diagram) எனும் படத்தின் மூலம் விளக்கலாம்.

1. கண்ணன் வந்தான்.
2. அழகான கண்ணன் வந்தான்
3. அழகான கண்ணன் வேகமாக வந்தான்.

இம்மூன்று சொற்றொடர்களையும் முறையே கீழ்க்கண்ட மூன்று கிளைப்படங்கள் மூலம் விளக்கலாம்.






அண்மை உறுப்புக்களின் வகைகளைக் காண்போம்.

**இடைவிடாத அண்மை உறுப்புக்கள் (Continous ICs):**


கண்ணன் சென்றான் என்பதில் அண்மை உறுப்புக்கள் கண்ணன் என்பதும் சென்றான் என்பதும் ஆகும். இவ்விரண்டு அண்மை உறுப்புக்களும் தொடர்ச்சியாக அமைந்துள்ளமையால் இவற்றை இடைவிடாத அண்மை உறுப்புக்கள் எனலாம்.


**இணைந்தியல் அண்மை உறுப்பு (Simultaneous ICs):**

அவன் வந்தான் என்பதை வியப்பைப் குறிக்கும் சுரவிசையுடன் கூறின் அவன் வந்தது வியப்பு ஆகிறது. வியப்பைக் குறிக்கும் சுரவிசை அவன் வந்தான் என்ற பயனிலையுடன் இணைந்து ஒலிப்பதாதல் இணைந்தியல்அண்மை உறுப்பு என்பர்.


**இடைவிட்ட அண்மை உறுப்புக்கள் (Discontinuous ICs):**

இதுவரையிலும் உறுப்பியின் உறுப்புக்கள் இரண்டும் அடுத்தடுத்து இருக்கக் கண்டோம். சில தொடர்களில் அடுத்தடுத்து நிற்காமல் மாறியும் நிற்கக் காண்கிறோம். ஆங்கிலத்தில் Is John going? என்பதனை எடுத்துக்காட்டுவர். John ஓர் அண்மையுறுப்பு Is...going என்பது மற்றைய உறுப்பாகும்.








வேகமாய் ஓடி இராமன் கீழே விழுந்தான் என்னும்போது ஓடி விழுந்தான் என்பது விழுந்தான் அல்லது கீழே விழுந்தான் என்பதனோடு இயையும். இடையில் இராமன் வருகிறது. வேகமாய் ஓடி.... கீழே விழுந்தான் என்பது இடைவிட்ட அண்மை உறுப்பாகும். இலக்கண ஆசிரியர்கள் கூறும் 'சுரை ஆழ அம்மி மிதப்ப' என்பதனை இதற்கு உதாரணம் காட்டலாம்.





**மயக்கும் அண்மையுறுப்பு (Ambiguous IsC):**

ஆங்கிலத்தில் Old ladies' hostel என்னும் பொழுது old என்பது ladies என்பதற்கோ hostel என்பதற்கோ அடைமொழி யாக அமையலாம். இருவேறு வகையான அண்மையுறுப்புகள் அமைவதைக் காணலாம்.





இவ்வாக்கியத்தில் old என்பது ladies என்பதற்கு அடையாக வருகின்றது.





இவண்கண் old என்பது hostel என்பதற்கு அடையாக வருகின்றது.

தமிழிலும் இதுபோன்ற தொடர்களைக் காணலாம்.




இவண்கண் பழைய என்பது அரசனுக்கு அடையாக வருகின்றது




இவண்கண் பழைய என்பது அரண்மனைக்கு அடையாக வரு கின்றது. இதுபோன்ற பல தொடர்களைத் தமிழில் காணலாம்.

**பல்நிலை அண்மை உறுப்பு (Multiple IsC):**

அண்மை உறுப்புக்கள் பொதுவாக இரண்டாக அமையும். இரண்டுக்கு மேற்பட்ட அண்மை உறுப்புகளையுடைய உறுப்பி களும் உண்டு.

கை கால் முகம் கழுவினான் என்பதில் உறுப்பியாகக் கொண்டால் கை கால் முகம் என்பது அதன் அண்மை உறுப்பாகும். இது உறுப்பியாகும்போது இதன் அண்மை உறுப்புக்கள் கை, கால், முகம் என மூன்று ஆகும். கை கால் முகம் என்ற தொடரை கை

கால்+முகம் என்றோ, கை + கால் முகம்என்றோ அண்மை உறுப்புக் களாகப் பிரிக்கமுடியாது. இங்கே இரண்டுக்கு மேற்பட்ட அண்மை உறுப்புக்கள் 'பல்நிலை அண்மை உறுப்புக்கள்' (Multiple ICs) என்று கூறலாம்.

இத்தொடர்களில் மூன்று உறுப்புக்கள் அண்மையுறுப்புக்களாக அமையும்:

அறம் பொருள் இன்பம்

சேர சோழ பாண்டியர்

மா பலா வாழை

இயல் இசை நாடகம்

இத்தொடர்களில் உறுப்பியின் உறுப்பாக அமையும் நிலையில் மூன்றுக்கும் சம உரிமை உள்ளது.

அண்மை உறுப்பு ஆய்வின் வளர்ச்சியில் மூன்றுகால கட்டங் களைக் குறிப்பிடலாம். இவ்வாய்வு முறையின் தந்தை புளூம் ஃபீல்டாக (Bloomfield) இருந்தபோதிலும் இதனை நன்கு வளர்த்த பெருமை ஹாரிஸ் (Harris)இ ரூலன் வெல்ஸ் (Rulon Wells) போன்றோரையே சாரும். ரூலன் வெல்ஸின் 'அண்மை உறுப்புப் பகுப்பு முறை' (Immediate Constituent Analysis) என்ற ஆய்வுக் கட்டுரையும், ஹாரிஸின் "அமைப்பு மொழியியல்" (Structural Linguistics) என்ற நூலுமே இவ்வாய்வு முறையைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குவதாக அமைந்துள்ளன.

அண்மை உறுப்பு ஆய்வு முறையில் நிறைகள் சில இருப் பினும் குறைகளும் உண்டு என்பதைப் பின்னர்அறிய நேரிட்டது. இந்த அண்மையுறுப்பு ஆய்வுமூலம் மொழியிலுள்ள எல்லா வாக்கியங்களின் அமைப்பையும் விளக்க முடியவில்லை.

i) சில சொற்றொடர்களிடையே காணப்படும் ஒற்றுமையை இவ்வாய்வு முறையால் தெளிவாக விளக்க முடியவில்லை. ஒரு சொற்றொடருக்கும் அதன் எதிர்மறைச் சொற்றொடருக்குமுள்ள ஒற்றுமையையும் இவ்வாய்வு முறையால் விளக்க முடியவில்லை.

ii) இரண்டு தனிச் சொற்றொடர்களைக் கூட்டுச்சொற்றொ டராக மாற்றும்போது ஏற்படும் சில மாற்றங்களை இவ்வாய்வு முறையால் விளக்க முடியவில்லை.

iii) பொருள் தொடர்புடைய சொற்றொடர்களை விளக்க முடியவில்லை.

இதுபோன்ற குறைகளை நீக்கப் பெரிதும் உதவியாக அமைந்த தொடரியல் கோட்பாடே 'மாற்றிலக்கண ஆய்வு' முறையாகும். அமைப்பு மொழியியல் மொழி ஆராய்ச்சியில் மொழிக் கூறுகளின் இருதலைப் பாகுபாட்டினையே வற்புறுத்தி அதற்கான எடுத்துக்காட்டுகளையும் கூறிச் செல்கிறது என்றோம். மொழி எவ்வாறு மனிதனுடைய மனத்திலே உருவாகிறது என்பதுதான் மொழியின் இலக்கண விளக்கமாக அமையவேண்டும் என்பது மாற்றிலக்கண அறிஞர்களின் கொள்கை. இவ்வாய்வு ஒன்றாலேயே மனிதனின் மனத்தில் மொழி உருவாகும் புலனுணர்வு முறையை நன்கு விளக்க முடியும்.

தொடரியலைப் பற்றித் தெளிவான ஆராய்ச்சி ஓரளவுக்கு அமைப்பு மொழியியல் ஆய்வு விரிவடைந்த பின்னரே துவங்கப் பட்டது எனலாம். 1930 ஆம் ஆண்டு வரை தொடரியல் பற்றித் தெளிவான கோட்பாடே உருவாகவில்லை. சொற்றொடர்கள் யாவும் உருபன்களின் தொடர்ச்சியே என்ற கொள்கையால் தொடரியல் ஆய்வு வளர வாய்ப்பில்லாமல் போய்விட்டது. சொற்றொடர்களின் ஆய்வு பற்றித் தொல்காப்பியர் போன்ற மரபிலக்கண ஆசிரியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். சொற்றொடர் ஆய்வு முறையைப் புளூம்ஃபீல்டு அவர்கள் அறிமுகப்படுத்தினார். அண்மை உறுப்பு ஆய்வு முறையால் சொற்றொடரமைப்பை ஆராயமுடியும் என்ற எண்ணம் மொழியியலறிஞரிடையே 1957 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலவி வந்தது. சொற்றொடர்களைப் பல தொடர் உறுப்புகளாகப் பாகுபாடு செய்வதையே இவ்வண்மை உறுப்பு ஆய்வு முறை வலியுறுத்துகின்றது. இது பெரும்பாலும் மரபு இலக்கணங்களில் கூறப்பட்டுள்ள சொற்றொடர் பாகுபாட்டு முறையையே ஒத்துள்ளது. புளூம்ஃபீல்டு அண்மை உறுப்பு ஆய்வு முறையில் ஏற்படுத்தாத ஒரு மாற்றத்தை ஹாரிஸ் தமது ஆய்வு முறையில் புகுத்தினார். ஒவ்வோர் அண்மை உறுப்பிற்கும் ஒவ்வோர் இலக்கணக் குறியீடு கொடுத்தார். இவ்விலக்கணக் குறியீடுகளையே சோம்ஸ்கி மாற்றிலக்கணத்தில் தொடர்க் குறியீடுகள் எனக் குறிக்கிறார். இத்தொடர்க் குறியீடுகளின் வரிசையே சொற்றொடர். இதையே தொடரமைப்பு இலக்கணம் (**Phrase structure grammar**) என்பர். இவ்வண்மை ஆய்வு முறையின் திருந்திய வடிவமே மாற்றிலக்கணத்தின் முதல்படியான தொடர் அமைப்பு இலக்கணமாகும்.

'மொழித்திறன்' (**Combetence**), 'மொழிச் செயல்பாடு, (**Performance**) ஆகிய இரண்டிற்குமிடையேயான வேறுபாட்டைத் தெளிவாகப் புலப்படுத்தியவர் சோம்ஸ்கி எனும் மொழியியல் அறிஞராவார். நாம் கேட்கின்ற கிளவிகளைவிட எந்தெந்தக் கிளவிகளை எல்லாம் மொழி பேசுவோனால் உண்டாக்கமுடியும் என்பதற்குத்தான் மாற்றிலக்கணத்தார் முக்கியத்துவம் அளிக்கின்

றனர். மொழி பேசுவோனின் படைப்புத் திறனுக்கே மொழித் திறன் என்று பெயர். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சில குறிப்பிட்ட கிளவிகளைப் படைப்பதற்கு மொழிச் செயல்பாடு என்று பெயர். இக்கோட்பாட்டின் படி பேசுவோன் இலக்கண விதிகளைத் தன் உள்ளகத்தே தெளிவாக அறிந்தவனாகிறான். இந்த ஆழ் நிலை அறிவு இருப்பதனால்தான் அவனால் பிழையின்றிப் பேசவோ பிறர் பேசுவதைப் புரிந்து கொள்ளவோ முடிகிறது. மொழியியல் பேரறிஞன் இச்சூழ்நிலை அறிவில்தான் கவனம் செலுத்துகிறான். பேசுவோன் படைக்கும் வாக்கியங்கள் எண்ணிலடங்காதன. இவை எண்ணில் அடங்குவன என்றால் அது மொழிச் செயல்பாட்டோடு தொடர்புடையது. ஆனால் இவை எண்ணிலடங்காதன. ஆதலால் இது மொழித் திறனோடு தொடர்புடையது.

## மாற்றிலக்கணம் (Transformation grammar)

தொடரியல் பற்றி ஆராய்ந்த கொள்கைகளில் மாற்றிலக்கணக் கொள்கையே மிகச்சிறந்த கொள்கையாகக் கருதப்படுகின்றது. சோம்ஸ்கி (Noam A. Chomsky) என்னும் அறிஞர் இன்றைய மாற்றிலக்கணத்தின் தந்தையாகக் கருதப்படுகின்றார். இவரது 'தொடரியல் அமைப்பு' (Syntactic Structure) என்ற நூல் மொழியியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். இந்நூலில் கூறப்பட்ட கருத்துக்களைக் கூட இவர் 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்' (Aspects of the theory of Syntax) என்ற நூலில் சிறிது மாற்றி யமைத்தார். மாற்றிலக்கணத்தின் இயல்புகளை,

(i) ஆய்வு நிலையில் வேறுபாடு.

(ii) வாக்கியங்களின் தொடர்பைக் குறிப்பிடுதல்.

(iii) அமைப்புப் பொருள் மயக்கத்தைக் குறிப்பிடுதல்

(iv) சொற்பொருள் மயக்கத்தைக் குறிப்பிடுதல்.

(v) பெயர்ப் பயனிலை அமைந்த வாக்கியங்களை உருவாக்கப் பயன்படல்.

(iv) திறன்நிலை.

(vii) அண்மைநிலை.

(viii) உணர்நிலை.

என்ற நிலையில் ஆராயலாம். இலக்கணம் எனின் அம்மொழியில் காணப்படும் அல்லது உருவாக்கப்படுகின்ற கணக்கற்ற இலக்கண வாக்கியங்களை உருவாக்கும் நிலையில் அமைந்திருக்க வேண்டும். இலக்கணம் பின்வரும் மூன்று பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.